வட்டாட்சித் தலைவர் அலுவலகங்களில் முதியோர், ஊனமுற்றோர், விதவைகள் உதவித்தொகை கேட்டு வரப்பெற்றுள்ள விண்ணப்பங்கள்.

* வினா எண். 260—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு சமூலக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு வட்டாட்சி தலைவர் அலுவலகத்திலும் முதியோர் உதவித் தொகை; விதவை உதவித்தொகை, ஊன முற்றோர் உதவித்தொகை கோரும் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மேல் எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) இம்மாநிலத்தில் உள்ள 16 மாவட்டங்களிலும் முதியோர், ஊனமுற்றோர், விதவைகள் உதவித்தொகை கேட்டு 31—12—1981 முடிய 63,482 விண்ணப்பங்கள் வரப் பெற்றுள்ளன. இந்த விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்து தகுதி வாய்ந்த நபர்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிடும்போது பல மாவட்டங்களில் விண்ணப்பங்கள் வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பங்களை விரைவில் பரிசீலனை செய்வதற்கு, உரிய காலத்திலே உதவித் தொகையை உடல் ஊனமுற்றவர்களுக்கும், முதியோர்களுக்கும், விதவைகளுக்கும் கொடுப்பதற்கு ஒவ்வொரு வட்டத்திலும் தனியாக ஒரு துணைத் தாசில்தாரை நியமனம் செய்து, துரிதமாகக் கொடுக்க ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, வட்டாட்சி அலுவலகத்தின் மூலமாக நாம் இன்றைக்கு ஊனமுற்றவர்களுக்கும் முதியோர்களுக்கும் விதவைகளுக்கும் உதவித் தொகை கொடுத்து வருகிறோம், அதுதவிர நிறைய விண்ணப்பங்கள் வந்து, 39,995 விண்ணப்பங்களின் மீது ஆணை கேட்டு வருவாய் நிர்வாக ஆணையாளர் குறிப்பு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது தவிர தகுதி வாய்ந்த அனைவருக்கும் உதவித் தொகை வழங்கலாமா என்பதும், இந்த வருஷம் 10,000 நபர்களுக்கு உதவி தொகை வழங்குவதும், அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

1983 பிப்ரவரி 12]

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, ஒரு வருடத்திற்கு ஒரு வட்டத்திற்கு இத்தனை மனுக்கள் வரையில்தான் உதவித் தொகை வழங்கலாம் என்று கட்டுப்பாடு வைக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி தகுதி வாய்ந்த ஊனமுற்றோர், முதியோர், விதவைகள் அனைவருக்கும் உதவித் தொகை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன். தகுதி வாய்ந்த அனைவருக்கும் உதவித் தொகை வழங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ப. சுந்தரம் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் கிராமப்புறங்களிலிருந்து வந்து விண்ணப்பம் செய்ய பல்வேறு வகைகளில் சிரமப்படுகிறார்கள். ஆகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிராமங்களுக்குப் போய் உடல் ஊனமுற்றவர்கள் யார், யார் என்று நேரிலே பார்த்து அவர்களுக்கு நிதி உதவி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தகுதிவாய்ந்த அத்தனை பேர்களுக்கும் உதவித் தொகை கொடுப்பது சம்பந்தமாக அரசு பரிசிலித்து வருகிறது என்று சொன்னார்கள். இப்போது ஒரு வட்டாரத்திற்கு இத்தனை விதவைகள், முதியோர்கள், ஊனமுற்றோர்களுக்கு உதவித் தொகை அளிப்பது என்ற லிமிட்டேஷன் வைத்திருக்கிறார்கள். ஆகையால்தான் அமைச்சரவர்கள் குறிப்பிட்ட 63,482 மனுக்கள் சாங்ஷன் செய்யப்படாமல் இருக்கின்றன. இந்த குறிப்பிட்ட அளவுதான் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை மாற்றி அனைவருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? நாம் சத்துணவு கொடுக்கிறோம். யாரும் பட்டினி கிடக்கக்கூடாது என்பதற்காக அதைச் செய்கிறோம். ஆகவே, ஆதரவற்ற நிலையில் இருந்து அவர்கள் கஷ்டப்படாமல் இருக்க, ஊனமுற்றவர்கள் விதவைகள், முதியோர்கள் எவ்வளவு பேர் இருந்தாலும் அத்தனை பேர்களுக்கும் இந்த உதவித் தொகையை வழங்க, அதிக மான தொகை ஒதுக்கி, துரிதமாகக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள தகுதி வாய்ந்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை கொடுப்பதற்கான துரிதமான நடவடிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகையாக, ஊனம் உற்றோர் உதவித் தொகையாக அரசு வழங்கும் உதவித் தொகையினை ஒவ்வோர் வட்டார அலுவலகத்திலும் கொடுக்கப்படுகிற மனுக்களின் சீனியாரிட்டி அடிப்படையிலே கொடுக்கிறார்கள். 100 பேர்கள் மனு கொடுக்கிறார்கள் என்றால், அதில் அந்த வருடம் 75 பேர்கள் அல்லது 90 பேர்கள் என்று குறியீடு வைத்துக் கொடுக்கும்போது, உண்மையாகவே ஊனம் உற்றவர்கள் அல்லது டோட்டலாக, முழுவதுமாக ஊனம் உற்றவர்கள் அந்த சீனியாரிட்டியில் 76-வது நபராகவோ, 90-வது நபராகவோ இருக்க நேரிட்டால் அவர்களுக்கு அந்த உதவித் தொகை, அடுத்த ஆண்டுதான் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் நேரிட்டுவிடும். ஆகவே, இப்படி டோட்டலாக ஊனம் உற்றவர்களுக்கு, அவர்களுடைய ஊனத்தின் அடிப்படையிலே, முன்னுரிமை கொடுத்து உடனடியாக அந்த உதவியை வழங்க பரிந்துரை செய்ய அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களோ ஊனம் உற்றவர்களோ அல்லது விதவைகளோதான் வட்டார அலுவலகங்களில் விண்ணப்பதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் அரசு முடிவு எடுத்துக்கொண்டு வருகிறது. சீனியாரிட்டி என்பது எல்லா முறைகளிலும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் கொடுக்காமல், பின்னால் வருபவர்களுக்கு கொடுத்தால், முதலில் மனு கொடுத்த எங்களுக்கு கொடுக்கவில்லையே என்று அவர்கள் நம்மிடம் முறையிடுவதற்கு நாம் ஆளாக நேரிடும். ஆகவே அதனையொட்டித்தான் சீனியாரிட்டி முறையில் முதலில் வந்தவர்களுக்கு முதலில் கொடுத்துவிட்டு பிறகு வருபவர்களுக்கு அடுத்த ஆண்டு என்று நிர்ணயித்துக் கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டிலுள்ள உடல் ஊனமுற்றோர்.

*வினா எண். 261—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உடல் ஊனமுற்றோர் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர்?

(இ) எத்தனை பேர் வேலைவாய்ப்பு பயிற்சி பெற்றுள்ளனர்?